## ஆந்திர மாநிலம் துநி மாவட்டத்தில் நடைபெற்ற வல்லமை முகாமின் புகைப்பட தொகுப்பு ஒரு சில








# APOSTOLIC AND PROPHETIC TRAINING CAMP

Date : 2022 February
**22, 23, 24**
(Tuesday, Wednesday, Thursday)

**Place :**
**Mahanaim Full Gospel Church of God**
**Plot No-1,2 & 28**
**Peddagutta, Christian colony,**
**Vanasthalipuram,**
**Hydrabad - 500 070**



*Speaker*

## Dr. AnandaStira

Contact : 91770 87860 & 99445 36343

## விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும்
காலை 9.30 மணி – 11.30 மணி

LIVE

My Deliverance Church

இந்த ஆராதனையை அனைவரும் குடும்பமாக நேரலையில் பார்த்து ஆசீர்வாதம் பெறுங்கள்.



Rev.Dr.A.Joshua

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month










Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:2 பிப்ரவரி 2022 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 8 ISSUE NO : 2 February 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



**கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்.**

II தெசலோ. 3:3

# அன்பரின் ஊழியம்

மலர்: 8 ◆ பிப்ரவரி 2022 ◆ இதழ் 2




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் எனக்கருமையான வாசகர்களே!

இயேசு கிறிஸ்துவின் மகிமையான, வல்லமையான நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

**... நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார் - மீகா 7:8** இந்த வசனத்தின்படி உலகமெங்கும் இருளும், துக்கமும், அழிவும் காணப்பட்டாலும் கர்த்தர் உங்கள் வெளிச்சமாயிருந்து உங்களை வழி நடத்துவார், கலங்காதீர்கள்!

உங்கள் அனைவருடைய சுகத்திற்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் நாங்கள் ஊக்கத்தோடு ஒவ்வொரு நாளும் ஜெபிக்கிறோம். நம்மை சுற்றிலும் மரணங்களும், பயங்கரங்களும் நேரிட்டாலும் நம்மை பாதுகாக்கும் வல்லவருடைய செட்டைகளின் நிழலில் நாம் பத்திரமாய் காக்கப்படுவோம். **"அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை" (சங்கீதம் 105:37)** என்ற வேத வார்த்தையின் படியே உன்னதத்தின் பெலன் உங்களை இடைகட்டி வாழ்விக்கும்.

கடந்த மாதத்தில் எங்கும் ஊரடங்கு இருந்தாலும் ஆந்திர மாநிலத்திலும், தெலுங்கானா மாநிலத்திலும் தேவன் கூட்டங்களை சிறப்பாக நடத்தி கொடுத்தார். ஐதராபாத் பட்டணத்தில் அநேக மக்கள் வந்து குடும்ப ஆசீர்வாத கூட்டத்தில் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றுச் சென்றார்கள். ஆந்திர மாநிலத்திலுள்ள துநியில் சகோ. கிரண் மற்றும் சகோ. சுபாஷ் அவர்கள் ஒழுங்கு செய்த அப்போஸ்தல தீர்க்கதரிசன முகாமில் அநேக மக்கள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் புத்துயிர் பெற்றுச் சென்றனர். இம்மக்களின் வாஞ்சையும், உற்சாகமும் எங்களை மிகுந்த வியப்பிற்குள்ளாக்கியது. இதேபோல அநேக இடங்களில் தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை எழுப்பும்படி நாங்கள் ஜெபிக்கிறோம், முயற்சிக்கிறோம்.


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

தொடர்ந்து நம்முடைய ஊழியங்களுக்காகவும், நமது சமூக வலைதளங்களில் வெளிவரும் அனைத்து நிகழ்ச்சிகளுக்காகவும், தொலைக்காட்சி ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். ஊழியங்களை இந்த இக்கட்டான நேரத்தில் மறவாமல் தொடர்ந்து தாங்குங்கள். இன்னும் அநேக புதிய பாடல்கள், செய்திகள் வலைதளங்களில் கொடுக்கப் படவும், அதற்கான புதிய உபகரணங்கள் வாங்கப்படவும் ஜெபியுங்கள், உதவுங்கள்.

நமது **SJ Saves Trust** அறக்கட்டளை மூலம் ஆசீர்வதிக்கப்படும் ஏழை எளிய மக்களுக்காக தேவனை துதிப்போம். உங்களில் அநேகர் இந்த பணிக்காக உதவி செய்கிறீர்கள். தேவன் தாமே தொடர்ந்து உங்களை நடத்தி ஆசீர்வதிப்பார்.

நமது ஊழியங்கள் இன்னும் அநேக இந்திய மொழிகளில் உற்சாகமாய் செய்யப்பட தேவன் நமக்கு உதவும் கரங்களை கொடுக்க ஜெபியுங்கள். எங்களுக்காக, எங்கள் குடும்பத்திற்காக குறிப்பாக எங்கள் பெற்றோரின் சுகத்திற்காக அனுதினமும் உங்கள் ஜெபங்களில் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**இம்மாத வாக்குத்தத்தம்**

**மீகா 7:8**
**ஏசாயா 28:5, 6**
**2தீமோத்தேயு 2:7**
**மத்தேயு 8:13**

## இதயம் தொட்ட எண்ணம்

The gift is not as Important as the Giver. Love the Giver and the gifts will accompany Him.

**வரங்கள் வரம் தருபவரை காட்டிலும் முக்கியம் அல்ல. வரம் தருபவரை நேசிப்போம், வரங்கள் அவரோடு வரும்.**

கிறிஸ்துவின் பணியில்
Dr. **ஜேன் ஜாஷ்வா**

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

State Bank of India, Cantonment, Trichy Main Branch
IFS Code : SBIN 0000930

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.




தேன் துளிகள் குறுஞ்செய்தி Whatsapp No. 95975 55066

**அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்**

**நம்பிக்கை TELEVISION**

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**ARADANA TV**
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**HARVEST TV**
சனி இரவு 07.30 – 08.00



# ஸ்திரப்படுத்தி பாதுகாக்கும் உண்மையுள்ள தேவன்

## (The Faithful God who Establishes and Protects)

**தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா**

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பரின் ஊழியப் பத்திரிக்கை வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை கூறுகின்றேன். இந்த ஆண்டில் ஒரு மாதத்தை நிறைவு செய்து மற்றுமொரு புதிய மாதத்திற்குள் பிரவேசிக்கச் செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிப்போம். இந்த மாதத்திலும் தேவ செய்தியின் வாயிலாக உங்கள் ஒவ்வொருவரையும் சந்திப்பதில் அதிக மகிழ்ச்சி யடைகிறேன். இந்த செய்தியை வாசிக்கிற உங்கள் ஒவ்வொருவரையும் தேவன் தாமே அற்புதங்களையும், அதிசயங்களையும் காணும்படி செய்வாராக!

**கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார் - 2 தெச. 3: 3**

தெசலோனிக்கே திருச்சபை மக்களை தேவன் ஸ்திரப்படுத்தி, தீங்கிலிருந்து விலக்கி பாதுகாப்பார் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை பவுல் அப்போஸ்தலனுக்கு இருந்தபடியால் இந்த வார்த்தையை உறுதியாக அவர் எழுதுகின்றார். இந்த வசனத்தில் நாம் தேவனுடைய மூன்று குணாதிசயங்களை புரிந்துக்கொள்ள முடிகிறது. முதலாவது **"அவர் உண்மையுள்ளவர்"** இரண்டாவதாக, **அவர் உங்களை ஸ்திரப்படுத்து வார் அல்லது பலப்படுத்துவார்,** மூன்றாவதாக **"தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்வார்"** என்கிற மூன்று குணாதிசயங்கள் குறித்து ஆணித் தரமாக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தான் சற்று விரிவாக, விளக்கமாக உங்கள் ஆசீர் வாதத்திற்கென்று பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## 1. கர்த்தர் உண்மையுள்ளவர்
## (The Lord is Faithful)

அன்பானவர்களே! உண்மை! இறைவனின் ஓர் ஒப்பற்ற குணம். நம்முடைய தேவன் உண்மையுள்ள தேவனாக இருக்கிறார். உண்மை யுள்ளவர் மட்டுமல்ல. அவர் உண்மையுள்ள நண்பனாகவும் இருக்கிறார். **...தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்' (1 கொரி. 10:13) கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார் (எபிரெயர் 3:6) 2கொரி. 1:18ல் "நாங்கள் உங்களுக்குச் சொன்ன வார்த்தை ஆம், அல்ல என்று இருக்கவில்லை; அதற்கு உண்மையுள்ள தேவனே சாட்சி"** எனவும் "பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் **உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; (வெளி. 19:11).** இவ்விதமாக வேதத்திலே அவருடைய உண்மையைக் குறித்து அநேக இடத்திலே எழுதப்பட்டுள்ளது. அவருடைய உண்மை நம்முடைய வாழ்க்கையிலே என்னவிதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது, என்ன அற்புதத்தை செய்கிறது. இதைக் குறித்து மூன்று காரியங்கள் கூற விரும்புகிறேன்.

### A. நம்முடைய பாவங்களை மன்னிக்க அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்
### (He is Faithful to forgive our Sins)

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை யிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்**

**- 1 யோவான் 1: 9**

நம்முடைய பாவங்களை மன்னிக்க அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். பாவத்தை மன்னிப்பேன் என்று வேறு யாராவது சொல்ல முடியுமா? நாம் செய்த அனைத்து பாவங்களையும் இந்த உலகத்தில் எந்த ஒரு மனிதனாவது மன்னிக்க முடியுமா? ஆம்! உங்கள் பாவங்களை மன்னிக்க **தேவன்** உண்மையுள்ளவராக இருக்கிறார். நம் பாவங்கள் மன்னிக்கப்பட வாய்ப்பே இல்லை

என்றால் என்ன ஆகும் என்று யோசித்து பாருங்கள். நம்முடைய பாவங்களுக்காக அவர் மரிக்காவிட்டால் நமக்கு இன்றைக்கு ஒரு விமோசனம் கிடைத்திருக்குமா? இதைக் குறித்தே மேற்கண்ட வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7).** 2022-ஆம் வருடத்திற்குள் நாம் வந்துவிட்டோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மரித்துப்போன இயேசுவின் இரத்தம் எப்படி என் பாவங்களை கழுவி சுத்திகரிக்கும் என்று நீங்கள் யோசிக்கலாம். இயேசுவின் இரத்தம் இன்றும் உயிரோட்டமுள்ளதாக இருக்கிறது. நீங்கள் இதை நம்பும்பொழுது, விசுவாசிக்கும்பொழுது அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு விடுவீர்கள். இதுவே அதன் அர்த்தம். இதையே தேவ வார்த்தை ஆணித்தரமாக சொல்கிறது.

## B. உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (He who called you is faithful)

**"உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1 கொரி. 1:9) உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர் (1 தெச. 5: 24).** எங்கிருந்து நம்மை அழைத்தார்? அந்தகாரத்தினின்று ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு அழைத்தார். எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். அவர் நம்மை அழைத்ததினாலே உண்மையுள்ளவராக இருக்கிறார். மகா பெரிய தேவன் நம்மை ஒரு பொருட்டாக எண்ணி அழைக்கிறார். அவருடைய அழைப்பின் குரலை கேட்டு அதற்கு நாம் கீழ்ப்படிந்து இருக்கின்றோமா? அன்று சகேயுவை அழைத்தார். உடனே மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தான். சிலருக்கு அழைப்பின் சத்தம் கேட்கும். ஆனால், கேட்டும் கேட்காதது போல் இருப்பார்கள். சிலர் அதை ஒரு பொருட்டாகவே எண்ணுவது கிடையாது. இப்படி பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆனால், **"என் ஆடுகள் என் சத்தத்தை அறியும்"** என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

**1 தீமோத்தேயு 1:12ம்** வசனத்திலே **"என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென் றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தின படியால் அவரை ஸ்தோத்திரிக்கிறேன்"** என்று பவுல் கூறுகிறார். உண்மையுள்ளவர்களுக்கு தேவன் பொறுப்புகளை கொடுத்து பயன்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவை பிதாவாகிய தேவன் உலகிற்கு அனுப்பினார். இயேசு தனக்கு மகிமையை தேடினதை வேதத்திலே எங்குமே பார்க்க முடியாது. பிதாவிற்கு மகிமையை தேடுகிறவராக இருந்தார். எனவே தான் அவர் உண்மையுள்ளவர்.

**சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை**

**- யோவான் 7:18**

அதுபோலத் தான் நம்மை அனுப்புகிறவர் இயேசு கிறிஸ்து, அவருடைய மகிமையை நாம் தேடுகிறவர்களாக இருக்கும் பொழுது நாமும் உண்மையுள்ளவர்களாக மாறுகிறோம். இயேசு நமக்கு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறார். அவர் தனது மகிமையை பெரிதாக நினைத்ததே இல்லை. நாமும் நம்முடைய அழைப்பில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். உங்களுடைய அழைப்பு என்ன என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். அழைத்த தேவன் உங்களோடுகூட இருந்து உங்களை பயன்படுத்துவார்.

## C. வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் (He who Promised is Faithful)

அழைத்தவர் வாக்குத்தத்தம் கொடுத்து அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராக இருக்கிறார். **"அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே" (எபிரெயர் 10:23)** நமக்கு அவர் வாக்குத்தத்தம் கொடுத்துவிட்டார் என்றால் அதை நம் வாழ்வில் நிறைவேற்றுவதில் அவர் உறுதியாய் இருக்கிறார். காலந்தாழ்த்துவது போல சில நேரம் இருந்தாலும், நிச்சயமாக அந்த வாக்குத்தத்தம் உங்கள் வாழ்வில் நடக்கும். பாவத்தை மன்னிப்பதில் தேவன் உண்மையுள்ளவர், அவருடைய அழைப்பில் உண்மையுள்ளவர். வாக்குத்தத்ததை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர் என சொல்லிக் கொண்டே போகலாம்.

உண்மையுள்ளவர்கள் மனுப்புத்திரரில் குறைந்திருக்கிறார்கள் என்று வேதமே கூறுகிறது.

**இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான்; உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள்**

**(சங்கீதம் 12:1)**

உண்மையுள்ளவர்களை தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். **நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார் 2 தீமோத்தேயு 2:13** இருப்பினும் வேதத்திலிருந்து இரண்டு பக்தர்களை உங்களுக்கு உதாரணமாக கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

**எபிரெயர் 3:5ம்** வசனத்தில் மோசேயை குறித்து **"அவன் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான்"** என்று எழுதப்

பட்டுள்ளது. மோசே ஒரு பெரிய தலைவன், ஜெப வீரன், போதகர், தீர்க்கதரிசி. இப்படியாக அநேக பெயர்களை மோசேக்கு சூட்டிக்கொண்டே போகலாம். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான்.

**தானியேல் உண்மையுள்ளவனாக இருந்தபடியால் அவன் மேல் ஒரு குற்றமும் சுமத்த முடியவில்லை (தானியேல் 6:4).** தானியேல் அரசாங்கத்தில் தான் வேலை பார்த்தான். இன்றைக்கு உங்களுக்கு என்ன சூழ்நிலையோ, அதே சூழ்நிலைதான் அன்றைக்கு தானியேலுக்கும் இருந்தது. ஆனால், தானியேல் உண்மையுள்ளவனாகவே இருந்தான். ஒரு குற்றமும் அவன் மேல் சுமத்த முடியவில்லை. தானியேல் தேவனுடைய காரியத்திலும், அவன் பணியிலும் நேர்மையாய் இருந்தான். கடைசியில் ஜெபம் செய்தான் என்று தான் வீணாக குற்றம் சுமத்தினார்கள். அது ஒரு வீண்பழி என்று நாம் அறிவோம்.

பிரியமானவர்களே! நீங்கள் உங்கள் அலுவலகத்தில், நீங்கள் தொழில் செய்கிற இடத்தில் உண்மையாக இருந்து பாருங்கள் ஒருவரும் உங்கள் மேல் குற்றம் சுமத்த முடியாது. ஒரு வேளை உண்மையுள்ளவர்களுக்கு கொஞ்ச காலம் கஷ்டம், துன்பம் வரலாம் ஆனால் நாட்கள் செல்ல செல்ல மற்றவர்கள் உங்களை புரிந்துகொண்டு இந்த மனிதர் ஒரு நேர்மையானவர் என்று சொல்வார்கள்.

அதனால் சாலொமோன் ஞானி **"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான்" (நீதி. 28:20)** என்று கூறுகிறான். நீங்கள் பரிபூரண ஆசீர்வாதங்களை பெற வேண்டும் என்றால் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதுமட்டு மல்லாது உண்மையுள்ள வாழ்க்கைத்தான் உங்களை பரலோகத்திற்கு கொண்டு செல்லும்.

**ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார் அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான் - (வெளி. 17: 14)** அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும், தெரிந்து கொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள். உண்மையாக இல்லை என்றால் பரலோகத்திலும் நமக்கு இடம் இல்லை. உண்மை யுள்ள தேவன் உங்களுடைய பாவத்தை மன்னித்து உங்களை விடுவிக்கிறார். ஆட்டுக்குட்டியான வருடைய இரத்தத்தில் தோய்க்கப் பட்டவர்கள் பொய் சொல்லமாட்டார்கள். அழைக்கப்பட்ட உங்களால் உண்மையற்ற சூழ்நிலைக்கு போக முடியாது. மோசே, தானியேல் போல நீங்களும் உண்மையானவர்களின் வரிசையிலே இடம் பெற வேண்டும். அது தான் தேவனுடைய எதிர்பார்ப்பு. அவர் உங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்கள் அனைத்தும் கட்டாயம் நிறைவேறும், ஏனெனில் கர்த்தர் உண்மையுள்ளவர்.

## 2. கர்த்தர் உங்களை ஸ்திரப்படுத்துவார்! (The Lord will Establish you)

அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார் என்றால் ஒரு அசைக்க முடியாத அஸ்திபாரத்தை உங்களுக்கு கொடுக்கப் போகிறார் என்பதை குறிக்கிறது. கன்மலையின் மேல் போடப்பட்ட அஸ்திபாரத்தை யாராலும் அசைக்க முடியாது. அன்பானவர்களே! அதே போல உங்களுடைய வாழ்க்கையின் அஸ்திபாரத்தை, ஊழியத்தின் அஸ்திபாரத்தை யாராலும் அசைக்க முடியாத ஒன்றாக மாற்றுவேன் என்று கர்த்தர் கூறுகிறார். இதை மூன்று பிரிவாக வகைப்படுத்தி இங்கே கூற விரும்புகிறேன்.

### A. அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் (He will Establish your Heart)

சில சமயங்களில் துர்செய்தியை கேட்பதால் அல்லது எதிர்பாராத, தோல்வியான காரியங்களைக் குறித்து நாம் அறியும்பொழுது நம்முடைய இருதயம் துவண்டு விடுகிறது. ஆகவே தேவன் முதலாவது நம்முடைய இருதயத்தை ஸ்திரப்படுத்த விரும்புகிறார். **சங்கீதம் 27:14** மற்றும் **சங்கீதம் 31:24ல் "கர்த்தருக்குக் காத்திரு! அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு"** என வாசிக்கிறோம். அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்த வேண்டும் என்றால் கர்த்தருடைய பாதத்தில் காத்திருக்க வேண்டும். நீதிமான் எந்தவித துர்செய்தியை கேட்டாலும் பயப்படமாட்டான்.

**துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும் - சங்கீதம் 112:7**

ஏனென்றால் கர்த்தருடைய பாதத்திலேயே, அவருடைய பிரசன்னத்திலேயே காத்திருக்கிறான். காத்திருக்கும்பொழுது கர்த்தர் அவன் இருதயத்தை ஸ்திரப்படுத்துகிறார். எதற்காக நம் இருதயத்தை ஸ்திரப்படுத்துகிறார். அவருடைய வருகைக்காக நம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்துகிறார்.

**நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே - யாக்கோபு 5:8**. இன்னொரு காரியம் நம்முடைய இருதயம் கிருபையினால் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது. **கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது (எபிரெயர் 13:9)** அவருடைய கிருபை இல்லை என்றால் ஒன்றுமே இல்லை பிரியமானவர்களே! சாலொமோன் ஞானி ஆலோசனையினால் எண்ணங்கள் ஸ்திரப்படும் என எழுதுகிறார். **"ஆலோசனையினால் எண்ணங்கள் ஸ்திரப்படும்" (நீதிமொழிகள் 20:18)** சில சமயங்களில் ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றால் பெரிய சங்கடமாகிவிடுகிறது. எந்த வேலைக்கு போவது, எந்த படிப்பை தேர்ந்தெடுப்பது, எந்த பெண்ணை திருமணம் செய்வது, எந்த மணமகனை தேர்வு செய்வது, எந்த ஊரில் வாழ்வது என முடிவெடுக்க முடியாமல் சிரமப்படுவார்கள். எனக்கு தெரிந்த ஒரு சகோதரி ஓய்வு பெற்ற பிறகு பல வருடங்களாக எந்த ஊரில் வசிப்பது என்பதை முடிவெடுக்கவே வருடக்கணக்காகி விட்டது. முடிவெடுக்கவே அவர்களால் முடியவில்லை. அதைத் தான் இங்கே ஆலோசனையினால் எண்ணங்கள் ஸ்திரப்படும் என கூறுகிறார். அப்படி என்றால் அந்த ஆலோசனை யார் கொடுக்க வேண்டும், தேவன் தான் கொடுக்க வேண்டும். நம்முடைய இருதயத்தில், எண்ணத்தில் ஆலோசனை கொடுத்து நம்மை ஆசீர்வதிப்பதற்கு அவர் விரும்புகிறார். கிருபையினால், ஆலோசனையினால் உங்களுடைய இருதயத்தை ஸ்திரப்படுத்துகிறார். **"இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்த வான்கள் அனைவரோடுங் கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" - 1தெச. 3:13-ன்** படி உங்களுடைய இருதயத்தில் குற்ற உணர்வு, பாவ உணர்வு இல்லாமல் பரிசுத்தமாய் காணப்பட உங்கள் இருதயத்தை தேவன் ஸ்திரப்படுத்த விரும்புகிறார். உங்களுடைய இருதயத்தை, மனதை, சிந்தனையை அவர் ஸ்திரப்படுத்துகிறார். நீங்கள் ஏதாவது ஒரு சூழ்நிலையில் பதட்டமாக இருக்கும் நேரத்தில் உங்கள் இருதயத்தை அவர் ஸ்திரப்படுத்துகிறார். சிலர் நான் மிக பலமானவன் என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் சில சூழ்நிலைகளால் கல்லானாலும் கரைந்து போகக் கூடிய மனது வந்துவிடும். கர்த்தர் உங்களோடு இருக்கும் பொழுது உங்களை பலப்படுத்தி, உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்.

## B. அவர் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை ஸ்திரப்படுத்துவார்
## (He will Establish your Spiritual Life)

**சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின (அப். 16:5).** நாம் விசுவாசத்தில் ஸ்திரப்பட வேண்டும். விசுவாசத்தில் ஸ்திரப்படும் பொழுதுதான் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் வளரும். நம்முடைய விசுவாசம் உயிருள்ளதாக இருக்க வேண்டும். அப்படி இருக்கும் பொழுது நாம் ஸ்திரப்படுவோம். இயேசு கிறிஸ்து பேதுருவை பார்த்து நீ ஸ்திரப்பட்ட பின்பு உன் சகோதரனை ஸ்திரப்படுத்து எனக் கூறுகிறார்.

**நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார் - லூக்கா 22:32**

விசுவாசத்தில் நாம் ஸ்திரப்படும்படி அவர் சில வரங்களை நமக்கு தருகிறார். ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் பெலனாக இருப்பதற்கு வரங்கள் நமக்கு அவசியம் தேவைப்படுகிறது.

**நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கும் - ரோமர் 1 : 10**

**உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக - 2 தெச. 3: 17**

எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் பாருங்கள். நம்முடைய இருதயத்தை தேற்றி, நல்வசனத்திலும், நற்கிரியையிலும் அவர் நம்மை ஸ்திரப்படுத்துகிறார். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நீங்கள் ஸ்திரமாக, உறுதியாக இருக்க வேண்டும் என்றால் நீங்கள் என்ன செய்ய வேண்டும். முதலாவது விசுவாசத்தில் வளர வேண்டும், இரண்டாவது அவருடைய வரங்களில் ஸ்திரப்பட வேண்டும், மூன்றாவது அவருடைய நல்வசனங்களை, நற்கிரியைகளை எல்லாம் உங்கள் வாழ்வில் வெளிப்படுத்த வேண்டும். அப்பொழுது ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் பெலனாக இருக்கும்படி செய்வார். பவுல் **"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப் படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்"** எனக் கூறுகிறார். **(1கொரி. 1:8).** ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு ஸ்திரத்தை, ஒரு பெலனை கொடுக்கும்படி தேவனிடம் கேளுங்கள். முடிவு பரியந்தம் நிச்சயம் உங்களை அவர் ஸ்திரப் படுத்துவார்.

## C. உலகப் பிரகாரமான காரியங்களில் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்
## (He will Establish you in Worldly Matters)

உலகப் பிரகாரமான எந்தவொரு காரியங்களிலும் அவர் உங்களை ஸ்திரப்படுத்த போதுமானவர். **"உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும் உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலை பெற்றிருக்கும்" (2 சாமுவேல் 7:16)** இது தாவீதிற்கு கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதம். தாவீது ஒரு அரசன், அவனது ராஜ்யபாரம் ஸ்திரப்பட்டிருக்கும் என அவனுக்கு சொல்லப்பட்டுள்ளது. மேலும் அவனுடைய குமாரன் சாலொமோனுடைய கையிலேயும் ராஜ்யம் ஸ்திரப்பட்டது.

**சாலொமொன் தன் தகப்பனாகிய தாவீதுடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தான்; அவன் ராஜ்யபாரம் மிகவும் ஸ்திரப்பட்டது.**

**ராஜ்யபாரம் சாலொமோனின் கையிலே ஸ்திரப்பட்டது (1 இராஜா. 2:12, 46)** இவர்கள் எல்லாம் உலகப் பிரகாரமான இராஜாக்கள், அரசாட்சி செய்கிறவர்கள். ராஜாக்கள் கையிலே ராஜ்ஜியம் ஸ்திரப்பட்டிருந்தது. இது உலகப் பிரகாரமான ஒரு ஆசீர்வாதம். உலகப் பிரகாரமாக ராஜாக்கள் அதிலே ஸ்திரப்பட்டு ஆளுகை செய்கிறார்கள். அதேபோல உலக காரியங்களில் உங்களை ஸ்திரப்படுத்த, பெலப்படுத்த கர்த்தர் விரும்புகின்றார். அது உங்கள் படிப்பாக இருக்கலாம், வேலைகாரியமாக இருக்கலாம். உங்கள் குடும்ப வாழ்க்கை அல்லது தொழில் காரியங்களில் சந்திக்கும் சில பிரச்சனைகளாக இருக்கலாம். ஊழியங்களில் சந்திக்கும் சில தடுமாற்றங்களாக இருக்கலாம். அவை அனைத்தையும் கர்த்தர் மாற்றி, உங்களை ஸ்திரப்படுத்துவார். குறிப்பாக பொருளாதாரத்தில் ஒரு ஸ்திரத்தன்மை இல்லாமல் இருக்கலாம். உலக வாழ்வில் நீங்கள் நிலையற்று அடுத்தடுத்து பாடுகளையும், கஷ்டங்களையும் சந்திக்கலாம். கலங்காதீர்கள்! சோர்ந்து போகாதீர்கள்! கொஞ்ச காலம் பாடு அனுபவிக்கிற உங்களை மீண்டும் அவர் ஸ்திரப்படுத்தி, பெலப்படுத்தி நிலைநிறுத்தவார்.

**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக் காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக**

**- 1 பேதுரு 5: 10**

உங்களுக்கு எதில் ஸ்திரம் வேண்டுமோ, பலமாக இருக்க வேண்டுமோ அதை தேவனிடம் கேளுங்கள். நிச்சயம் அவர் நீங்கள் கேட்பதை தந்து, உங்களை ஸ்திரப்படுத்துவார். உலகப் பிரகாரமான அனைத்து காரியங்களிலும் நீங்கள் ஸ்திரமாக இருப்பீர்கள்.

## 3. கர்த்தர் உங்களை தீமையினின்று விலக்கிக் காப்பார்
## (The Lord will Protect you from the evil one)

அன்பான தேவ ஜனமே! தீமை என்றால் என்ன? தீமை என்றாலே அது பிசாசினால் வருகிற காரியங்கள். அது பாவத்தால் வருகிற ஒன்று. தீமையான மனிதர்களால் வருகிற காரியங்கள். தீமை என்று சொல்லும்பொழுது அது தீமையும், தீமை செய்யும் மனிதர்களையும் குறிக்கிறது. தீமையிலிருந்து மட்டுமல்ல தீமை செய்கிறவர்களிடமிருந்தும் கர்த்தர் உங்களை பாதுகாப்பார். ஆபகூக் தீர்க்கதரிசி **"தீமையை பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே"** என தேவனை குறித்து சொல்கிறார் **(ஆபகூக் 3:13) சங்கீதம் 121:7ல் "கர்த்தர் உங்களை எல்லா தீமைக்கும் விலக்கிக் காப்பார்"** என சொல்லப்பட்டுள்ளது. அது வியாதியாக இருக்கலாம், தோல்வியாக இருக்கலாம், பண நெருக்கடியாக இருக்கலாம் அல்லது குடும்பத்திலே ஒரு பிரச்சனையாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் எல்லா தீமைக்கும் தேவன் உங்களை விலக்கி காப்பார். **"ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது" (சங்கீதம் 91:10)** என வாக்குப்பண்ணினவர் அப்படியே செய்வார். தீர்க்கதரிசியாகிய செப்பனியா **"கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார், இனித் தீங்கைக் காணாதிருப்பாய்"** *(செப்பனியா 3:15)* என அருமையாக கூறுகிறார். இப்படிப்பட்ட ஆசீர்வாதமான வாக்குத்தத்தை கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிறார். எனவே, எதற்காகவும் சோர்ந்து போகாதீர்கள்!

ஒரு சமயம் சீஷர்கள் இயேசுவை பார்த்து ஐயரே எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுங்கள் என கேட்கின்றார்கள். மலைப்பிரசங்கத்தில் இந்த ஜெபமும் வருகிறது. அநேக பேருக்கு ஜெபம் எப்படி செய்ய வேண்டும் என்று தெரியாது. அவ்வாறு சீஷர்களுக்கும் ஜெபம் எப்படி செய்ய வேண்டும் என தெரியவில்லை. மீன் பிடிக்கிறவன், வரி வசூல் செய்கிறவன், படித்தவன், படிக்காதவன் என அனைவரையும் இயேசுகிறிஸ்து அழைத்தார். எனவே அவர்களுக்கும் ஜெபிக்க தெரியவில்லை. இயேசு அவர்களுக்கு ஜெபத்தை சொல்லிக்கொடுக்கின்றார். ஜெபத்தின் கடைசியில் **"தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" (மத்தேயு 6:13; லூக்கா 11:4)** என அற்புதமான ஒரு வார்த்தையும் சொல்கிறார். இதை வாசிக்கின்ற தேவ ஜனமே! கர்த்தர் சொல்லிக்கொடுத்த ஜெபத்தை மனப்பாடம்

செய்யுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கும் அதை சொல்லிக்கொடுங்கள். குடும்ப ஜெபத்தில் அதை மறவாமல் சொல்லுங்கள். யோவான் 17ஆம் அதிகாரத்திலே இயேசுவே அந்த ஜெபத்தை ஏறெடுக்கிறார்.

**நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் - யோவான் 17: 15**

இயேசுவே பிதாவினிடத்தில் இந்த அருமையான ஜெபத்தை ஏறெடுப்பது நமக்கு எல்லாம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. இந்த ஜெபம் ஒரு பாதுகாப்பின் ஜெபமாக கருதப்படுகிறது.

**தீமையை விட்டு விலகி, நன்மை செய், சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்**

**- சங்கீதம் 34:14**

**தீமையை விட்டு விலகி, நன்மை செய், என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்**

**- சங்கீதம் 37: 27**

எங்கெல்லாம் தீமை இருக்கிறதோ, எதுவெல்லாம் தீமை என்று நீங்கள் நினைக்கின்றீர்களோ அதைவிட்டு விலகி ஓடுங்கள். **நீதிமொழிகள் 3:7ல் கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு என எழுதப்பட்டுள்ளது.** தேவனுக்கு பயப்படுகிற பயம் உங்களுக்குள் இருக்கும்பொழுது நீங்கள் தீமையைவிட்டு ஓடிவிடுவீர்கள். **தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் (நீதி. 8:13).** தேவனுக்கு எதுவெல்லாம் பிரியமில்லையோ அது எல்லாம் தீமை. அதை நீங்கள் வெறுக்கும்பொழுது தேவ பயம் உங்களுக்குள் இருக்கிறது. அந்த பயம் உங்களுக்குள் இருக்கும் பொழுது நீங்கள் தீமை செய்ய மாட்டீர்கள். அதுமாத்திரமல்ல, தீமை உங்களை அணுகாது. **(நீதி. 19:23) கர்த்தருக்குப் பயப்படுகிறவனை தீமை அணுகாது.** கர்த்தர் தீமைக்கு உங்களை ஒப்புக் கொடுக்க மாட்டார்.

ரோமர் 12ஆம் அதிகாரத்திலே 7 முதல் 21 வசனம் வரை வாசிக்கும்பொழுது உண்மையான கிறிஸ்தவனின் அடையாளங்களை குறித்து சொல்லப் பட்டுள்ளது. அதை கவனமாக வாசிக்கும்பொழுது கடைசியில் **"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினால் வெல்லு" (ரோமர் 12:21)** தீமை உங்களை ஜெயிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள், நீங்கள் தீமையை வெல்ல வேண்டும என்பதே தேவனின் எதிர்ப்பார்ப்பு.

**ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; - (ரோமர் 12:17)**

**ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்**

**- (1 தெச. 5:15)**

**தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள் - (ஏசாயா 1: 16)**

நீங்கள் ஒருவருக்கொருவர் மனதளவில் கூட தீங்கு நினைக்காதீர்கள், தீமை செய்யாதீர்கள். இது இயேசு நமக்கு கற்றுக்கொடுக்கும் ஓர் நல்லபாடம்.

அன்பானவர்களே! யோசேப்பின் வாழ்க்கை நம் எல்லோருக்கும் தெரியும். ஆதியாகமம் 50:20-ம் வசனத்தில் **"நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப் பண்ணினார்"** என யோசேப்பு வெளிப்படையாக தன் சகோதரர்களை பார்த்து கூறுகிறார்.

எவ்வளவோ தீமையை யோசேப்புக்கு அவனுடைய சகோதரர்கள் செய்தார்கள். ஆனால் கர்த்தர் அவனை அனைத்து தீமையினின்றும் பாதுகாத்து உயர்த்தினார். அவன் சகோதரர்கள் முன்பாக நிமிர்ந்து நிற்கும்படி செய்தார். யோசேப்பு தன் சகோதரர்களுக்கு தீங்கு செய்யவில்லை மாறாக நன்மையே செய்தான்.

ஆம்! நீங்களும் மற்றவர்களுக்கு தீங்கு நினைக்காதீர்கள். நீங்கள் யாருக்கு விரோதமாக தீங்கு நினைக்கிறீர்களோ அந்த நபர் தேவனுக்கு பயந்தவராக இருந்தால் உங்களுக்கு அது சாபமாக முடிந்து விடும். ஆமானை நினைத்துக்கொள்ளுங்கள், அவன் மொர்தெகாய்க்காக செய்த தூக்கு மரத்தில் மொர்தெகாயை தூக்கிலிடவில்லை. ஆனால் ஆமானை அந்த மரத்தில் தூக்கிலிட்டார்கள். அதுதான் தேவனுடைய நடத்துதல்.

பிரியமானவர்களே! கர்த்தர் தீமையினின்று உங்களை காத்துக்கொள்வேன் என்று வாக்குப் பண்ணுகிறார். உங்களை தீமையிலிருந்து தேவன் பாதுகாப்பார். எனவே நீங்கள் யாருக்கும் தீமை செய்யாமல் கவனமாக இருக்க வேண்டும். அதைத் தான் கர்த்தர் உங்களிடம் எதிர்பார்க்கின்றார். தீங்கு செய்கின்ற வரிசையில் நீங்கள் இருக்கக் கூடாது. சிலர் தீங்கான காரியத்தை உங்களுக்குச் செய்தாலும் சோர்ந்து போகாதீர்கள். நம்முடைய மீட்பர் வல்லவர், அவர் அதை நன்மையாக மாறப்பண்ணுவார். இந்த மாதத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தை உரிமையாக்கிக் கொள்ளுங்கள். அவர் உங்களை ஆசீர்வதிப்பார்!

உண்மையுள்ள தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஸ்திரப்படுத்தி பாதுகாத்து வழிநடத்துவாராக. தேவ கிருபையும், ஆசீர்வாதமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக.

# Praise Report - துதி அறிக்கை

## மருத்துவர்களின் கூற்றை மாற்றி கருவிலிருந்த குழந்தையின் குறைபாட்டினை நீக்கிய அற்புதர்!



எனது மனைவி கருவுற்ற ஐந்தாவது மாதத்தில் பரிசோதனை செய்த மருத்துவர்கள் **குழந்தையின் இருதயம் மிகவும் பெலவீனமாக இருப்பதாகவும், உடல் உறுப்புகள் வளர்ச்சியின்றி அனைத்தும் செயலிழந்து விட்டதாகவும், உடனடியாக கருவை கலைத்து விடும்படியும் கூறினார் கள்.** இதைக்கேட்டு நாங்கள் மிகவும் அதிர்ந்து போய் விட்டோம். என்ன செய்வது என்று தெரியாமல் கலங்கிக் கொண்டிருந்த வேளையில், அருகாமையில் எங்களுக்கு தெரிந்த ஒரு போதகரிடம் ஜெபிக்க சென்றோம். அவர்கள் எங்களது நிலையை கேட்டறிந்து தொலைப் பேசி மூலம் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களை தொடர்பு கொண்டு எங்களது நிலையை சொல்லி ஜெபிக்கும்படி கேட்டார்கள். **தொலைப் பேசியில் எங்களுக்காக சகோதரர் மிகுந்த பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு நாங்கள் அதிசயங்களை காணும்படி செய்தார். மறுமுறை பரிசோதனை செய்த பொழுது குழந்தை நல்ல நிலையில் இருப்பதாகவும், எந்த பிரச்சனையும் இல்லை என்று மருத்துவர்கள் கூறினார்கள்.** தற்பொழுது ஏழு மாதம் ஆகின்றது. என் மனைவியும், கர்ப்பத்தில் உள்ள குழந்தையும் ஆரோக்கியமாக உள்ளார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு. வினோத்குமார், குளச்சல்**

## பிரிந்த குடும்பம் இணைந்தது

மகளுக்கு திருமணம் செய்து கொடுத்து அவள் சென்னையில் மூன்று வருடமாக வசித்து வருகிறாள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனை யினால் ஒன்றரை ஆண்டு காலமாக கணவரை பிரிந்து எங்கள் வீட்டில் வாழ்ந்து வந்தாள். மகளை நினைத்து நாங்கள் மிகவும் கவலை யடைந்தோம். இந்நிலையில் விஜயதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு மகள் குடும்பமாக ஒன்று சேர்ந்து வாழ வேண்டுமென்று நாங்கள் ஜெபித்தோம். Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்களும் என் மகளுக்காக ஊக்கமாக ஜெபித்து அனுப்பினார்கள். ஜெபத்தை கேட்ட அற்புதத்தின் தேவன் பிரிந்த குடும்பம் இணைந்து வாழ அநுக்கிரகம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. நான்ஸி பாய், மார்த்தாண்டம்**

## பில்லி சூன்ய கட்டிலிருந்து அற்புத விடுதலை

செய்வினை, பில்லிசூன்ய கட்டுகளினால் மிகுந்த துன்பங்களை குடும்பமாக அனுபவித்து வந்தோம். விடுதலைக்காக பல இடங்களுக்கு சென்றோம். எனினும் விடுதலை கிடைக்க வில்லை. நிம்மதி, சந்தோஷத்தை இழந்து கண்ணீருடன் நாட்களை கடத்தி வந்தோம். இந்நிலையில் விஜயதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டோம். கூட்ட முடிவில் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்கள் எங்களுக்காக பாரத்துடன் ஜெபித்து, ஜெப எண்ணெய் தந்து அதை தண்ணீரில் கலந்து இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று சொல்லி வீடு

முழுவதும் தெளிக்கும்படி கூறினார்கள். அதன் படியே செய்தோம்! கர்த்தர் கண்ணீரின் ஜெபத்தை கேட்டு செய்வினை, பில்லிசூன்ய கட்டிலிருந்து அற்புத விடுதலையை கொடுத்தார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்! எங்களது பொருத்தனை காணிக்கையை ஊழியப்பணிகளுக்கு தருகின்றோம்.

**- திரு.தேவராஜ், கன்னியாகுமரி**

## தடைகள் நீங்கி வீடு கட்டப்பட்டது!

வீடு கட்ட ஆரம்பித்து பக்கத்து வீட்டாரால் பெரும் பிரச்சனை ஏற்பட்டு நீதி மன்றம் வரை செல்ல வேண்டியதாயிற்று. மன நிம்மதியில்லாமல் மிகவும் கவலையடைந்தோம். இந்நிலையில் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களை நானும் எனது கணவரும் சந்தித்து பிரச்சனை சுமூகமாக முடிய ஜெபித்துக் கொண்டோம். சகோதரர் ஜெபித்ததின் பலனாக பெரும் பிரச்சனை நீங்கியது. **"சாலோம், சமாதானமுள்ள வீடு"** என்று கூறி ஜெபித்தார்கள். அதன்படி வீடு கட்டி முடிக்கப்பட்டு அதில் குடியேற தேவன் அநுக்கிரகம் செய்தார். அற்புதம் செய்த தேவாதி தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்!

**- திருமதி. எலிசபெத், திருச்சி**

## குழந்தை பாக்கியத்தை அருளின அற்புதர்!

எங்களுக்கு 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திருமணம் நடந்தது. எனக்கு தைராய்டு பிரச்சனை இருந்தது. நாங்கள் குழந்தை பாக்கியத்திற்காக நாகர்கோவிலில் நடைபெற்ற பங்காளர்களுக்கான தனிஜெபத்தில் Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டோம். ஐயா எங்களுக்காக ஜெபித்து கர்த்தர் குழந்தை பாக்கியத்தை தருவார் என்று கூறினார். மாபெரும் பரம வைத்தியர் இயேசு என்கிற புத்தகத்தை வாங்கி படிக்கும்படி ஆலோசனை கூறினார்கள். நாங்கள் அதை வாங்கிப் படித்தோம். 2019 ஜுலை மாதம் கருவுரும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் தேதி கர்த்தர் எங்களுக்கு அழகிய பெண் குழந்தையை கொடுத்து ஆசீர்வதித்தார். கர்த்தர் செய்த இந்த மாபெரும் அற்புதத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி எங்கள் பொருத்தனை காணிக்கையை தருகின்றோம்.

**- திருமதி. பபின் சோனியா, நாகர்கோவில்**

## பக்கவாதம் நோய் முற்றிலும் நீங்கியது!

நான் பக்கவாதம் வந்து பேசுவதற்கு முடியாமல், எழுதுவதற்கும் முடியாமல் ஆகி விட்டேன். நான் நன்றாக பேசவும், எழுதவும் முடிந்தால் அன்பரின் ஊழியப் பத்திரிக்கையில் சாட்சி சொல்லுவேன் என்று பொருத்தனையோடு ஜெபம் செய்தேன். கர்த்தர் எனக்கு பரிபூரண சுகத்தை கட்டளையிட்டார். அற்புதம் செய்த தேவனை துதிக்கின்றேன்.

**- Sis. கிரேஸ்லெட் சந்திரகுமாரி, நாகர்கோவில்**

## ஏற்ற சமயத்தில் உதவிய சர்வ வல்லமையுள்ள தேவன்

என் மருமகளை பிரசவத்திற்காக மருத்துவ மனையில் சேர்த்திருந்தோம். வலி வராதபடியால் காத்திருந்தோம். வலி வருவதற்காக சில மருந்துகளை கொடுத்தார்கள் எனினும் வலி வரவில்லை. இதனால் நாங்கள் மிகவும் மனக் கஷ்டத்தில் இருந்தோம். இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு நிலைமையை கூறி ஜெபித்துக் கொண்டோம். **கர்த்தர் ஜெபத்தை கேட்டு உடனடியாக வலி வரும்படியும், சுகப்பிரசவத்தில் அழகிய பெண் குழந்தை பிறக்கும் படியும் கர்த்தர் அற்புதம் செய்தார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

பிறந்த குழந்தைக்கு கண்ணில் நீர் வடிந்தது. தூசி என்று கூறி மருத்துவமனையில் நீர் பாய்ச்சி அடித்தும் குணமாகவில்லை. ஏதோ கண்ணில் ஒட்டி உள்ளது, எனவே **குழந்தைக்கு மயக்க மருந்து கொடுத்து அறுவை சிகிச்சை தான் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டனர்.** உடனடியாக அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு ஜெபித்துக் கொண்டேன். மருத்துவர்கள் மறுநாள் வாருங்கள் என்று அனுப்பிவிட்டனர். **மறுநாள் மருத்துவமனை சென்ற பொழுது மருத்துவர்கள் குழந்தையை பரிசோதனை செய்து அறுவை சிகிச்சை தேவையில்லை, மருந்து மாத்திரம் பூசி வந்தால் சரியாகிவிடும் என்றனர். அதேபோல ஒருசில நாளில் குழந்தையின் கண்கள் சரியானது.** கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. வளர்மதி, தஞ்சாவூர்**

## மாட்டுக்கொட்டகையில் வாழ்ந்த எங்களை 16,50,000/– ரூபாயில் சொந்த வீடு வாங்கும்படி ஆசீர்வதித்த தேவன்!



நாங்கள் பல வருட காலமாக சிறிய மாட்டு கொட்டகையில் வசித்து வந்தோம். வீடு கட்டவோ அல்லது சொந்தமாக வீடு வாங்கவோ பல்வேறுவிதமான முயற்சிகளை மேற்கொண்ட போதும் காரியம் ஒன்றும் சாத்தியமாக அமையவில்லை. இந்நிலையில் Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்களை ஒருமுறை சந்தித்து ஜெபித்தபோது அவர்கள் சங்கீதம் 20:4ன் படி உங்கள் மனவிருப்பங்களை நிறைவேற்றுகிற கர்த்தர் திக்கற்றவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்தித் தர வல்லவராய் இருக்கிறார் என்று தீர்க்கதரிசனமாய் கூறி பாரத்தோடு ஜெபித்தார்கள். தேவன் அந்த கண்ணீரின் ஜெபத்தை கேட்டு நாங்கள் நம்புவதற்கு ஏதுவல்லாத நிலைக்கு மத்தியில் Rs.16,50,000/- மதிப்புள்ள ஒரு வீட்டை வாங்க தேவன் கிருபை செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. சண்முகவடிவு, நாகப்பட்டினம்**

## மரணத்தின் பிடியிலிருந்து எங்களை விடுவித்த அதிசயர்!



கடந்த 2021ம் வருடம் மே மாதம் எனக்கும் எனது தாயாருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டது. இதன் நிமித்தம் நாங்கள் மிகவும் மன வேதனைக்குள்ளானோம். கண்ணீரிலேயே எங்கள் நாட்களை கடத்தி வந்தோம். இந்நிலையில் நானும், எனது தாயாரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் ஒருநாள் தொலைப்பேசியின் மூலம் ஜெபத்திற்காக Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்களை தொடர்பு கொண்ட பொழுது மிகவும் கரிசனையோடு எங்கள் ஜெப விண்ணப்பங்களை கேட்டு எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். அவர்கள் ஜெபித்த போது தேவ ஆவியானவர் பின் வரும் வேத வசனங்களை அவர் மூலம் எங்களுக்கு சுட்டி காண்பித்தார். **"கர்த்தர் உன்னோடே இருக்கிறார், பயப்படாதே! உன் ஆயுசு நாட்களை பூரணப்படுத்துவார்" என்று தீர்க்கதரிசனமாக கூறி ஜெபித்தார்கள். ஜெபத்தை கர்த்தர் கேட்டு எங்கள் இருவருக்கும் அந்த நோய் தொற்றிலிருந்து பரிபூரண விடுதலையைத் கர்த்தர் தந்து சுகமாக்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- திரு. பாஸ்கர், பட்டுக்கோட்டை**

# ஆந்திர மாநிலம் துநியில் நடைபெற்ற அப்போஸ்தல தீர்க்கதரிசன முகாமின் எதிரொலி

நான் ஆசிரியராக (Physics) பணியாற்று கின்றேன். விசாகபட்டினத்தில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். பல வருடங்களாக செய்வினை கட்டுகளால் நான் கஷ்டப்பட்டு வந்தேன். ஒவ்வொரு நாளையும் கண்ணீரில் கழித்து வந்தேன். ஜெப வேளையில் முன்பின் தெரியாத என்னை Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்கள் பெயர் சொல்லி அழைத்து, இயேசுவின் நாமத்தினால், அந்த செய்வினை கட்டுகள் அகலும்படி ஜெபித்தார்கள். அந்த நொடிப்பொழுதே செய்வினை கட்டுகள் முறிக்கப்பட்டன. அபிஷேகத்தை பெற்றிருந்தாலும், ஆர்வத்துடன் ஊழியம் செய்யவில்லை. இந்நிலையில் சகோதரர் அவர்கள் நடத்தின வல்லமை முகாமை நானும் எனது நண்பர்களும் சேர்ந்து எடுத்து நடத்த, ஒழுங்கு செய்ய முடிவு செய்தோம்.

கர்த்தருடைய கிருபையினால் 2022-ம் வருடம் ஜனவரி மாதம் 12 முதல் 17 வரைக்கும் தீர்க்கதரிசன முகாம் துநியில் நடத்தினோம். சகோதரருடைய அனுபவ ரீதியான சாட்சிகளும், அபிஷேகத்தின் வல்லமைகளும், தேவன் அவர்களை பயன்படுத்தும் விதத்தினையும், பரலோக மேன்மையையும் அறிந்து கொண்டோம். சகோதரனின் வேத அறிவு எங்களை மிகவும் கவர்ந்தது. வேதத்தை திறக்காமலேயே நூற்றுக்கணக்கான வசனங்களை சொல்வது, அதற்குரிய ஒப்பு வசனங்களை குறிப்பிடுவதை கேட்டு நாங்கள் ஆச்சரியமடைந்தோம். அவர்களது தாழ்மை, மனதுருக்கம் எங்களை அதிகமாய் தொட்டது. அவருடைய அனுபவங்கள் உலகத்தில் யாருக்குமே கிடைக்காத ஒன்றாகும். ஆவிக்குரிய வாழ்க்கையில் மந்தமாக, ஊழியம் செய்து சோர்ந்து போயிருந்த எங்களுக்கு இந்த பயிற்சி முகாம் உற்சாகப்படுத்துவதாக அமைந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

அநேக கல்லூரி மாணவர்கள் மற்றும் 200க்கும் மேற்பட்ட ஊழிய வாஞ்சையுள்ள மக்கள் இதில் கலந்துகொண்டனர். கர்த்தருடைய மகத்துவமான வல்லமை, அவருடைய வியாபித்தல், சிருஷ்டிப்பை குறித்து நடந்த அதிசயங்களை நாங்கள் கேட்டபொழுது மிகவும் ஆச்சரியமடைந்தோம். நாம் இயேசு



கிறிஸ்துவை விசுவாசிக்கும் பொழுது அவர் செய்த அதிசயங் களையும், அதை விட மேலான அற்புதங் களையும் செய்ய முடியும் என்பதை உண்மையாக நடந்த சரித்திரத்தின் மூலமாக அறிந்து கொண் டோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!



**- திரு. கிரண்**

பெயர் கிறிஸ்தவனாக வாழ்ந்து வந்தேன். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் துநியில் நடத்திய தீர்க்கதரிசன முகாமில் கலந்து கொண்டேன். அதில் கூறப்பட்ட மிக ஆழமான சத்தியங்கள், சகோதரரது ஆவிக்குரிய அனுபவங்கள் என்னை மிகவும் கவர்ந்தது. நான் தனிப்பட்ட வாழ்க்கை யில் மிகவும் மனம் சோர்ந்த நிலையில் இருந்தேன். இம்முகாம் எனது வேதனை களை முற்றிலும் மாற்றியது. என்னுடைய பழைய வாழ்க்கை முற்றிலும் மாறி ஆவிக்குரிய வாழ்க்கையில் புத்துயிர் பெற்றேன். வேதத்தின் மீது அதிக ஈடுபாடு உண்டானது. கர்த்தருக்கே மகிமை! ஊழியம் செய்யவேண்டும் என்ற ஆர்வமும், கர்த்தருடைய ஊழியத்திற்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் எனக்கு வந்தது. அதன்படி நான் சகோதரர் அவர்கள் செய்கின்ற ஊழியங்களுக்கும், S J Saves Trust அறப்பணிகளுக்கும், மருத்துவமனை சேவை பணிக்கும் என்னால் இயன்ற உதவிகளை செய்கின்றேன்.



**- திரு. நாகேஷ்வர ரெட்டி, ராஜமந்திரி**
Superintendent, BSNL (Retd.)

அப்போஸ்தல தீர்க்கதரிசன முகாமில் கலந்து கொண்டது மிகவும் பிரயோஜனமாக இருந்தது. உண்மையாக கர்த்தர் இயேசு சகோதரர் அவர்கள் மத்தியில் வல்லமையோடு நடமாடு வதை கண்டேன். கிறிஸ்தவர் களாகிய நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் எவ்வளவு பின்தங்கி இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டேன். ஊழியம் இன்னும் அதிக வேகத்தோடு செய்யவேண்டும் என்ற ஆவிக்குரிய தாகம் ஏற்பட்டது. நான் அழைத்து வந்த வாலிப பிள்ளைகளும் மிகவும் உற்சாகமடைந்து கர்த்தருக்கு ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்தனர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!



**- திரு. சுபாஷ், தலைமை ஆசிரியர், துநி**


**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**

Ministry of Jesus - Dr. Ananda Stira
Dr Jane Joshua
My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in
Ananda Stira @dranandastira
Margretstira
Jane Joshua @DrJaneJoshua
My Deliverance Church @mydeliverance.church
Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesstira

ministryofjesus.in

drjane15

# கொள்ளை நோயினின்று காக்கப்பட

# விசேஷித்த ஜெபம்!



அன்பின் கர்த்தாவே! நீர் எங்கள் ஜெபத்திற்கு எப்பொழுதும் பதில் தருகிறீர் என்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

இயேசுவே, உம்முடைய சிலுவையின் இரத்தத்தினாலே நாங்கள் சர்வவல்ல தேவனை **"அப்பா பிதாவே"** என்று கூப்பிட எங்களுக்கு புத்திர சுவிகார சிலாக்கியத்தை கொடுத்தீர். உமக்கு நன்றி!

அப்பா! உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தையே நம்பி நாங்கள் வருகிறோம். உம்முடைய பார்வையில் நாங்கள் ஒன்றும் இல்லை என்பதை அறிவோம். எங்களுடைய நீதிகள் எல்லாம் அழுக்கான கந்தைகளாகவே இருக்கிறது. இருப்பினும் இயேசுவின் சிலுவை மரணத்தை நோக்கிப் பார்க்கும் பொழுது எங்களுக்குள்ளே பெரிய நம்பிக்கை வருகின்றது. ஏனென்றால் அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, மத்தேயு 8:17-ல் வேதம் கூறுகிறது. எங்களுக்காக எல்லா பாடுகளையும் சுமந்து தீர்த்த ஒரே ஒரு தெய்வம் உம் திருக் குமாரனாகிய இயேசு மட்டுமே என்பதை நாங்கள் அறிவோம். கடந்த கொரோனோ காலத்தில் எங்களது பயணங்களில் கர்த்தர் தாமே உடனிருந்து எங்களை காத்துக் கொண்டீர். அதற்காக ஸ்தோத்திரம்! தொற்று நோய் பரவி வரும் இந்த காலத்தில் எங்களுக்கு எந்த தீங்கும் வராமல் பாதுகாத்து வருகிறீர். அந்த கிருபையை நினைத்துப் பார்த்து உமக்கு நன்றி சொல்கிறோம்.

கொரோனோ நோயினால் அநேக தேவ பிள்ளைகள்கூட இறந்து போனார்கள். பல குடும்பங்களில் உள்ளவர்கள் வடித்த கண்ணீரை நாங்கள் பார்த்தோம். எத்தனை இடங்களில் இறந்தவர்களின் உடலை புதைக்கக்கூட இடமில்லாமல் ஜனங்கள் வேதனைப்பட்டதை அறிவோம். தேவனே தயவு செய்து எங்களை கண்ணோக்கிப் பாரும்!

தகப்பனே! நாங்கள் உமக்கு விரோதமாக செய்த பாவங்களை, தவறுகளை, துணிந்து செய்த அக்கிரமங்களை எல்லாம் மன்னித்தருளும். எங்கள் நாவினால் செய்த பாவங்களையும் ஒரு விசை மன்னியும். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் உம்மை அணுக முடியாது. மத்தேயு 9-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டது போல எங்கள் பாவங்களை எல்லாம் மன்னித்தருளும். தாவீது உம்மை நோக்கி கெஞ்சி ஜெபித்தான். அவன் இஸ்ரவேல் ஜனங்களைப் போல தன்னை கடினப்படுத்தவில்லை அப்பா! தாவீது தன்னை தாழ்த்தினான். தம்மை தாழ்த்தி ஆண்டவரே நான் தான் பாவம் செய்தேன். ஜனங்கள்

என்ன செய்தார்கள் என்று கதறுகிறான். அவ்வாறு, இந்த தீமையான மரணநோய்கள் எங்களை அணுகாதபடிக்கு பலத்த சத்தத்தோடு கூட கண்ணீரோடு இயேசு ஜெபிப்பதாக எபிரெயர் 5:7-ல் பார்க்கிறோம். நெகேமியா, தானியேல், மோசே கேட்டது போல நாங்களும் எங்கள் பாவங்களை மன்னிக்கும்படி கேட்கின்றோம். தாவீது கேட்டது போல எங்கள் குற்றம், குறைகளை மன்னித்தருளும். நாங்கள் உம்மை தேடாத குறைகளை மன்னியும். இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத் தினாலே எங்களை கழுவியருளும்.

ஆம் கர்த்தாவே! இந்த வைரஸ் லட்சக்கணக்கான மக்களை கொள்ளை கொண்டு போய் இருக்கிறது. தயவு செய்து எங்களை காப்பாற்றும், எங்கள் கூடாரத்தை சுற்றிலும், உம்முடைய அக்கினி மதில் இருக்கட்டும். இந்த வைரஸ் இனி மேலும் எங்களுடைய நாட்டை, உலக நாடுகளை தாக்காதபடிக்கு காத்துக் கொள்ளும். திறப்பின் வாசலில் நின்று ஊக்கமாய் ஜெபிக்கிறோம் கர்த்தாவே! இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நோயாளியையும் காத்துக்கொள்ளும். அவர்கள் படுக்கைக்கு சென்று உம்முடைய கரங்களைஅவர்கள் மேல் வைத்து முற்றிலும் குணமாக்கும்.

மருத்துவர்கள், செவிலியர்கள், பாராமெடிக்கல் ஊழியர்களையும் காத்துக் கொள்ளும் ஆசீர்வதியும். அவர்கள் முயற்சிகள் வீண் போகக்கூடாது. என்ன தான் அவர்கள் முயற்சித்தாலும் கர்த்தாவே எங்களுடைய மூச்சு உம்முடைய கரத்தில் தான் இருக்கிறது. உம்முடைய அன்பு பிள்ளைகளை பாதுகாத்தருளும். எங்கள் மேல் மனமிரங்கி இந்த ஜெபத்தை கேட்டு மறு உத்தரவு அருளும்.

உம்மால் மாத்திரமே இந்த கொள்ளை நோயை சுட்டெரிக்க முடியும். உம்முடைய பிள்ளைகளுக்கு நீர் ஜீவனை தாரும் இயேசு ஸ்வாமி. ஏழை மக்களுக்கு அரசாங்கம் தங்களால் முடிந்த உதவிகளை செய்கிறது அப்பா. அந்த உதவிகளினால் அநேகர் காக்கப் பட ஜெபிக்கிறோம். இந்த சூழ்நிலையிலும் கர்த்தாவே கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது அப்பா. யாருமே இந்த கொள்ளை நோயால் மரிக்கக் கூடாது அப்பா! எந்த ஜனமும் சாவதை நான் விரும்பவில்லை என்று எசேக்கியேல் சொன்னது போல இந்த சாவை முற்றிலும் நிறுத்தும் இயேசப்பா. புது பெலனை எங்களுக்கு தாரும். வயதானவர் களை, சிறுபிள்ளைகளை விசேஷமாக காத்துக்கொள்ளும்.

யார் யார் இந்த ஜெபத்தை செய்கிறார் களோ அவர்கள் அனைவரும் இயேசுவின் மென்மையான கரத்தை உணரும்படி செய்யும். வியாதி முழுவதையும் அகற்றிப்போடும். நீர் உம்முடைய வார்த்தையை அனுப்பி அவர்களை குணமாக்கும். உம்முடைய காயப் பட்ட கரங்களால் குணமாக்கும். உம்முடைய செட்டைகளின் நிழலிலே அவர்களை காத்துக் கொள்ளும். மரண பயத்திலிருந்து ஜனங்களை விடுதலையாக்கி, எந்த வாதையும் வராதபடி செய்யும். பெரிய சாட்சியை நாங்கள் கேட்கும்படி செய்யும். இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம் பிதாவே! ஆமென்.

# லோட்டி மூன்
# Lottie Moon



1840-ஆம் ஆண்டு விர்ஜினியா பிளான் டேசன் என்னுமிடத்தில் செல்வ செழிப்புள்ள குடும்பத்தில் லோட்டி மூன் பிறந்தார். தென் அமெரிக்காவில் முதுகலைபட்டம் பெற்ற முதல் பெண் இவர் தான். தன்னுடைய கல்லூரியில் நுழையும் போது ஒரு நாஸ்திகராக நுழைந்தார். ஆனால் 1858-இல் இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றார். கென்டெக்கி மற்றும் ஜார்ஜியாவில் வெற்றியுள்ள பள்ளிகளை துவங்க வழி வகுத்தார். அதன் பின்பு சீனாவில் ஊழியம் செய்ய ஆண்டவருடைய அழைப்பை தெளிவாக பெற்றார்.

1873-ஆம் ஆண்டு லோட்டிமூன் தன்னுடைய எதிர்காலத்தை சீன மிஷனெரி யாக அர்ப்பணித்தார். தென் பாப்டிஸ்ட் அயல்நாட்டு மிஷன் போர்டு மூலம் நியமிக்கப் பட்ட பெரிய வரிசையில், மிஷனெரியில் முதல் பெண்மணியாக காணப்பட்டார். 80000 மக்கள் தொகை கொண்ட டெங்சோநகரம் என அறியப்பட்ட சன்டோங் மாகாணத்தில் உள்ள கடலோர பகுதியில் குடியேறினார். (தற்போது பெங்காளி என அழைக்கப்படுகிறது). இவர் பெண்களை கருத்தில் கொண்டு அவர்களை வளர்ப்பதிலும் முன்னேற்றுவதிலும் முன்னணியில் இருந்தார். இவர் சிறுமிகளுக்கும் கல்வி கற்ற பெண்களுக்கும் அறிவியல் ரீதியாக சுவிசேஷத்தை அறிவிப் பதில் முதல் வரிசையில் காணப்பட்டார். இதை சீனர்களும் அமெரிக்கர்களும் விவேகமற்ற செயலாக எண்ணினர். இவர் அழைப்பு பெற்ற நேரத்தில் இருந்து மரிக்கும் காலம் வரை அவருடைய முதன்மை நோக்கம் இயேசு கிறிஸ்துவை தம் வாழ்க்கையின் மூலம் பிறருக்கு வெளிப்படுத்துவதே. இவர் பெண்களை தேடி அவர்கள் வீட்டிற்குப்போய் அவர்களை சந்தித்து போதித்து வந்தார். 1878-ஆம் ஆண்டு பெண்கள் பள்ளியை ஆரம்பித் தார். இது சீனபெண்கள் மற்றும் ஆண்கள் பள்ளிக்கு செல்வதற்கு அநேக பள்ளிகளை நிறுவ காரணமாக அமைந்தது.

1880-ஆம் ஆண்டு தொடக்கத்தில் பள்ளி வேலையை விட்டு விட்டு நாட்டு வேலை செய்ய தன்னை அர்ப்பணித்தார். அவர் எந்தவித பயமுமில்லாமல் 10000 மைல் களுக்கு அப்பால் பயணம் செய்து பெண்களை சந்தித்து அவர்களுடைய வீட்டிலும் தெருவிலும் சென்று அவர்களுக்கு சுவிசேஷத்தை பகிர்ந்தளித்தார். சீனமொழியிலும் அவர் களுடைய கலாச்சாரத்தை நளினமாக கற்றுக் கொண்டு கை தேர்ந்தவராக காணப்பட்டார். அந்த சீன மக்களை நேசித்து அவர்களுடைய உடையையும் கலாச்சாரத்தையும் பின்பற்றினார்.

1885-ஆம் ஆண்டு 300 மைல்கள் தாண்டி ஒரு கூட்டம் ஆண்கள் நடந்து வந்து சத்தியத்தை தங்களுக்கு போதிக்கும்படி அவரை கெஞ்சி கேட்டார்கள். அவர்களுடைய சத்தத்தை கவனித்த லோட்டி மூன் நான்கு நாள் பயணம் மேற்கொண்டு பிங்குடு என்னும் நகரத்தில் வந்து குடியேறினார். சீனமக்கள்

மத்தியில் அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் பாதுகாப்புக்கு அப்பாற்பட்டு தனியாக வாழ்ந்த முதல் வெளிநாட்டு பெண் என்று குழுவால் கருதப்பட்டார். இவர் முதன் முதலில் சீனாவில் சபையை நிறுவிய பெண் ஆவார்.

இவருடைய 40 வருட ஊழியத்தில் முதல் தென் பாப்டிஸ்ட் மிஷனெரி டாக்டர், செவிலியர், மருத்துவமனை, பெண்கள் கல்லூரி, சமூக சேவை நிறுவனம் மற்றும் உயர்தர இறையியல் செமினரி போன்றவற்றை வரவேற்றார். அவருடைய அழகு, அறிவு மற்றும் ஞானத்தின் மூலம் நிலையான கோபுர மாக மாறினார். புதிய மிஷனெரிகளுக்கு உதவி செய்தார்.

1912-ஆம் ஆண்டு அரசியல் நிச்சயமற்ற ஒரு பஞ்சம் பிங்குடுவில் வாழ்ந்த மக்களை பயமுறுத்தியது. எனவே இவர் பரம்பரையாக கொண்ட பணங்களை கொடுத்து பஞ்சத்தி லிருந்த மக்களை விடுவிக்க முயற்சி செய்தார். மற்ற பணங்களை கொடுத்து மிஷன் போர்டு கடன்களை அடைத்தார். அவர் பசியினால் வாடி நம்பிக்கையற்று வியாதிபட்டார். அதனால் அங்குள்ள இளம் மிஷனெரிகள் அவரை மெடிக்கல் பாதுகாப்பிற்காக அமெரிக்காவிற்கு அனுப்ப உறுதி செய்தனர். 1912-ஆம் ஆண்டு அவர் சென்ற கப்பல் ஜப்பானில் உள்ள கோப் என்ற பகுதியில் சென்று கொண்டிருக்கும் போது கிறிஸ்மஸ் சமயத்தில் மரணமடைந்தார். அவருடைய தாக்கம் அப்போதுதான் தொடங்கியிருந்தது.

அவர் வாழ்ந்த காலத்தில் லோட்டி மூன் நூற்றுக்கணக்கான கடிதங்களை பாப்டிஸ்ட் இதழ்களுக்கும், சபைகளுக்கும், பெண் களுக்கும் எழுதியுள்ளார். அவருடைய கடிதங்கள் மூலம் பல பெண்கள் குழுவை உருவாக்க ஜார்ஜியா மற்றும் விர்ஜினியாவில் இருந்து மிஷனெரி ஆதரவு கிடைத்தது. 1888 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தென் பாப்டிஸ்ட் மாநாட்டில், பெண்கள் மிஷனெரி ஐக்கியம் (WMU) உருவாக அவருடைய கடிதங்கள் பெரிய சக்தியாக அமைந்தது. இந்த பெண்கள் மிஷனெரி ஐக்கியம் சார்பாக அவர்கள் ஒரு திட்டத்தை உருவாக்கினர். அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் நேரம் காணிக்கை எடுக்க வேண்டுமென்று என்ற யோசனையை பெண்கள் மிஷனெரி ஐக்கியம் ஏற்றுக் கொண்டது. இந்த காணிக்கையை பிங்குடுவில் உள்ள மற்ற பெண் மிஷனெரிகளுக்கு உதவுவதற்காக பயன் படுத்தினர். அவருடைய பெயரின் அடிப்படையில் அதிகம் பணம் திரட்டப் பட்டது. லோட்டி மூனின் கதை சீனா மற்றும் உலகம் முழுவதும் உள்ள விசுவாசிகள் தொடர்ந்து தங்கள் வாழ்க்கையை மிஷனெரி பணிக்கு அர்ப்பணிக்க ஊக்குவிப்பதாக காணப்படுகிறது.


# திருநெல்வேலி ஜெபமையம்

## ஜெப மைய முகவரி

**அன்பரின் ஊழிய ஜெப மையம், க.எண். 41B/2A, முதல் மாடி,**
**திருவனந்தபுரம் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.**
**குறிப்பு:- பாளை பேருந்து நிலையம் அருகில், LIC அலுவலகத்திற்கும் ஸ்டேட் பாங்குக்கும் இடையிலுள்ள கட்டிடத்தின் முதல் மாடி**
**அலுவலக அலைபேசி எண்: 94889 08328**

# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை



உன் தகப்பன் போஜனபானம் பண்ணி, நியாயமும் நீதியுஞ் செய்தபோது அவன் சுகமாய் வாழ்ந்திருக்கவில்லையோ? அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார் - எரேமியா 22:15,16

சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள் - நீதி. 31:30

வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும். - சங்கீதம் 112:9

**"உன்னைப் போல பிறனையும் நேசி"** என்று நம் எல்லோருக்கும் அறிவுரை கூறிய அன்பர் இயேசுவின் நாமத்தில் இந்த அறப்பணிக்காக ஜெபிக்கிறவர்களுக்காகவும், கொடுத்து உதவுகிறவர்களுக்காகவும் அதிக நன்றி கூறுகிறோம். கடந்த வருடம் முழுவதும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளை நாம் ஆதரிக்கவும், விதவைகளுக்கு உதவி செய்யவும், மேலும், பல நம்பிக்கையற்ற இளம் விதவைகளுக்கு உதவி செய்ய வைத்த நம் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இந்த பணிகளுக்கு கொடுத்து உதவின உங்கள் ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.

**கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த மாதம் சேலம் மாவட்டம் வாழப்பாடி, கூத்தாட்டுப்பட்டியில் சுமார் 100 பிள்ளைகளுக்கு முகக்கவசம், நல்ல உணவு பள்ளிக்கு தேவையான** Ruled Note, **பென்சில், பேனா,** Eraser, Pouch, Pencil Box, Geomentrybox, Ball Pen **மேலும், ஊட்டசத்து மருந்துகள் புரோட்டின் பவுடர், விட்டமின் சிரப் குறிப்பாக இந்த குளிர்காலத்தில் மிக அத்தியாவசிய தேவையான போர்வை வழங்கப்பட்டது.**

**நாமக்கல் மாவட்டம் ஓலப்பாளையம், சின்னமருதூர் ஆகிய கிராமங்களிலுள்ள ஏழை பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் போர்வை வழங்கப்பட்டது.**

**அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்**

**- மத். 19 : 21**

நமது ட்யூசன் சென்டர் மூலம் அநேக படிக்க முடியாத பிள்ளைகள் நமது ஆசிரியர்களின் தொடர் முயற்சியினால் படிப்பில் முதல் மாணவர்களாக திகழ்கின்றனர். இதற்காக நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். அநேக பிள்ளைகள் நல்லொழுக்கத்தை கற்றுக் கொள்கிறார்கள். நமது ட்யூசன் சென்டரில் எல்.கே.ஜி. முதற்கொண்டு கல்லூரி படிக்கும் மாணவர்கள் வரைக்கும் நன்மை

பெறுகிறார்கள். நாம் சொல்லிக் கொடுக்கும் நலலொழுக்கத்தின் மூலம் அநேக பெற்றோர்கள் குடியை விட்டு விட்டு நல்ல பழக்கத்திற்கு வந்திருக்கின்றனர். கர்த்தர் தாமே இருண்ட இந்த கிராமங்களில் இந்த அன்பான பிள்ளைகளின் நிமித்தம் பெரிய ஒரு முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் கொண்டு வரும்படி ஜெபியுங்கள். அறப்பணி களின் தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதன் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்**

**- மத்தேயு 5 : 7**


**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**

Tamil Whats App No: 95004 87059

## Employment Opportunity

## வேலை வாய்ப்புகள்

1) ***Accountant***
   ***B.Com., / M.Com., Graduates***
   *Skills Required : Tally ERP 9* பயன்படுத்த தெரிந்தவர்கள்
2) ***Prayer warriors :*** *Qualification +2/Any degree Born again Christian only*
3) ***Camera men with adequate experience***
   முன் அனுபவமுள்ள கேமராமேன்கள்
4) ***Video Editors*** 5) ***Drivers***
6) ***Cooks*** 7) ***House keepers***

**தகுந்த ஊதியம் கொடுக்கப்படும்**

***Apply to : info@mojindia.org***

**கிறிஸ்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்**

## சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம் வாழப்பாடி, கூத்தாட்டுப்பட்டி, ஓலப்பாளையம், சின்னமருதூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டது.














திடீரென எனது சிறுநீரகத்தில் கற்கள் உருவாகி, சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டது, ஏவல் ஆவிகளாலும் அதிக கஷ்டப்பட்டேன். பரிசோதனை செய்த மருத்துவர்கள் Creatine அதிகரித்துள்ளதாக கூறினார்கள். சிறுநீரகம் முழுவதுமாக கெட்டுப் போய்விடுமோ என்று பயந்தேன். அச்சமயத்தில் Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்கள் செய்து வரும் அறப்பணிகள் குறித்து கேள்விப்பட்டு பொருத்தனை செய்து, சகோதரர் அவர்களிடம் ஜெபிக்கும்படி கேட்டு கொண்டேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். அற்புத சுகத்தை எனக்கு அருளினார். அடுத்த முறை பரிசோதனைக்கு சென்ற பொழுது எனது கிரியாடின் நார்மல் நிலைக்கு வந்திருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் செய்த அற்புதத்தை மறவாமல் SJ அறப்பணிகளுக்கு எனது பொருத்தனை காணிக்கைகளை சமர்ப்பிக்கின்றேன்.

**- திரு. பிரகாஷ், கன்னியாகுமரி**

இதுபோன்று பொருத்தனை செய்து உதவி செய்தவர்கள் அநேகர். அவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கின்றோம். இப்பணிகள் குறித்து இன்னும் அநேகருக்கு அறிமுகம் செய்யுங்கள். இன்னும் ஓலைக் குடிசையில் வாழும் மக்களுக்கு வீடு கட்டி தர இருக்கிறோம். அதற்காக ஜெபியுங்கள்! அநேக அநாதை பிள்ளைகள் உணவின்றி, படுக்க இட வசதியின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குடும்ப கஷ்டத்தின் நிமித்தம் சிறுவயதிலேயே கடினமான வேலைக்கு அனுப்பப் படுகிறார்கள். எல்லாவற்றையும் நாம் சீர்ப்படுத்தி அந்த சிறுபிள்ளைகளை நன்கு வளர்த்து படிக்க வைப்பதால் அந்த பிள்ளைகள் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள்.

**ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் - எபேசியர் 2:10ன் படி நற்கிரியைகளை தொடர்ந்து செய்வோம்.**

# S J SAVES TRUST

## கிராமப்புற மருத்துவமனை பணிகள்

**நமது கிராமப்புற மருத்துவமனை நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. இப்பொழுது அநேக கிராமங்களிலிருந்து நோயாளிகள் வருகிறார்கள். குறைந்த கட்டணத்தில் அவர்களுக்கு சிறப்பான மருத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டு பணிகளும் தொடர்ந்து வளர்ச்சியடைய ஜெபியுங்கள்.**






☞ இலவசமாக பயிலும் வகையில் ஸ்வயம் இணையதளத்தில் 590க்கும் மேற்பட்ட சான்றிதழ் படிப்புகளை ஆன்லைனில் இலவசமாக படிக்கலாம் என சென்னை ஐஐடி அறிவிப்பு

☞ என்பிடிஇஎல் எனப்படும் தேசிய தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சென்னை ஐஐடி உள்ளிட்ட ஐஐடிக்கள் மற்றும் பெங்களூரு ஐஐஎஸ்சி ஆகிய உயர் கல்வி நிறுவனங்கள் ஸ்வயம் இணைய தளத்தின் வாயிலாக ஆன்லைனில் ஏராளமான படிப்புகளை இலவசமாக வழங்கி வருகின்றன. பொறியியல், அறிவியல், மேலாண்மை கலை மற்றும் சமூக அறிவியல் உள்ளிட்ட பாடப்பிரிவுகளில் 593 சான்றிதழ் படிப்புகள் வழங்கப்படுகின்றன. டேட்டா சயின்ஸ், எலெக்ட்ரிக்கல் வெகிக்கில்ஸ், மெஷின் லேர்னிங் பைத்தான், ஜாவா, சி, சி பிளஸ்பிளஸ், பிளாக்செயின் டெக்னாலஜி, இந்துஸ்தானி இசை என பலதரப்பட்ட படிப்புகள் இதில் அடங்கும்.


☞ 2022 ஜனவரி பருவ மாணவர் சேர்க்கைக்கு ஆன்லைனில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. ஆன்லைன் வாயிலாக இலவசமாக வழங்கப்படும் இந்த சான்றிதழ் படிப்புகளில் ஜனவரி 31ம் தேதி வரை சேரலாம் என சென்னை ஐஐடி அறிவித்துள்ளது.

☞ அண்மைக்காலமாக ஆன்லைன் கல்வி மிகவும் பிரபலமாகி வருகிறது. தற்போது நிலவி வரும் கரோனா சூழலில் ஆன்லைன் கல்வியின் முக்கியத் துவம் மேலும் அதிகரித்து இருக்கிறது. அந்த வகையில் ஆன்லைனில் படிக்க விரும்புவோருக்கு என்பிடிஇஎல் திட்டம் ஒரு வரப்பிரசாதம் என்று சென்னை ஐஐடி ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஆன்ட்ரூ தங்கராஜ் கூறினார்.

☞ நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை நடத்துவது குறித்து அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதி களுடன் மாநிலத் தேர்தல் ஆணையர் பழனிகுமார் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடந்து வருகிறது.

☞ தமிழகத்தில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 498 பேரூராட்சிகளுக்கு உள்ளாட்சித் தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் திட்ட மிட்டுள்ளது. இதுதொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளின் சார்பில் கோயம்பேட்டில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாநிலத் தேர்தல் ஆணையர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மாநிலத் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 11 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கட்சிக்குத் தலா 2 பேர் வீதம் கூட்டத்தில் பங்கேற்றனர்.

☞ இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தேர்தலை ஒரே கட்டமாக நடத்துவதா அல்லது இரண்டு கட்டங் களாக நடத்துவதா என்பது குறித்தும், கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையில் அரசியல் கட்சிகள் மற்றும் வாக்களிக்க வரும் பொது மக்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.



☞ ஒமிக்ரான் பரவலுக்கான 14 விதமான அறிகுறிகள் குறித்து பிரிட்டன் ஆராய்ச்சி ஒன்று ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது.

☞ கொரோனா பரவல் எப்போது முடிவுக்கு வரும் என காத்துக் கொண்டிருக்கிறோம். இதனால் பொருளாதார இழப்பு, உயிரிழப்பு, நோய் பாதிப்பு உள்ளிட்டவைகளால் மக்கள் ஏராளமான பிரச்சனைகளை சந்திக்கிறார்கள்.

☞ இது எப்போது முடிவுக்கு வரும் என்பது குறித்து ஆய்வாளர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்த வகையில் இந்த கொரோனா தொற்று ஒமிக்ரானுடன் முடிவுக்கு வரும் என வைராலஜிஸ்ட் ஒருவர் தெரிவித்துள்ளார்.

☞ கொரோனா வைரஸ் என்றால் தொண்டை கரகரப்பு, காய்ச்சல், இருமல் உள்ளிட்ட அறிகுறிகள் சொல்லப்பட்டன. ஆனால் இந்த ஒமிக்ரான் வேரியண்ட்டானது டெல்டா அறிகுறியிலிருந்து சற்று மாறுபடுகிறது. டெல்டா வேரியண்ட் நோயாளியை மிகவும் தீவிர நிலைக்கு கொண்டு சென்றது. அத்துடன் மருத்துவமனையில் ஏராளமானோர் அனுமதிக்கப்பட்டனர். ஏராளமான உயிரிழப்புகளை ஏற்படுத்தியது.

☞ நிறைய பேருக்கு காய்ச்சல், லேசான இருமல், வாசனை இழப்பு, சுவை இழப்பு, மூச்சு பிரச்சனை, நெஞ்சு வலி, நுரையீரல் பிரச்சனை உள்ளிட்டவை ஏற்பட்டன. ஆனால் ஒமிக்ரானோ நுரையீரலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவது என்பது மிகவும் குறை வாகவே காணப்படுகிறது. சாதாரண காய்ச்சல் அல்லது சளியை போலவே இந்த ஒமிக்ரான் பாதிப்பு ஏற்பட்டு வருவதாக மூத்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
## (Renovation)
## புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

**தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-**

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

திருச்சியில்

## குடும்ப ஆசீர்வாத ஜெபம்

நாள் : 2022
பிப்ரவரி 26
சனிக்கிழமை

நேரம்
காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 18

தேவ செய்தி
Dr.ஆனந்தஸ்திரா & குடும்பத்தினர்

தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627

Telugu Whats App No: 91770 87860